இப்படிப்பட்ட சூழ்நிலையில் உடனடியாகப் போலீசுக்குப் புகார் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், புகார் செய்த உடன் போலீசார் நடவடிக்கை உடனடியாக எடுக்கவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் நிச்சயமாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்காது.

மாண்புமிகு உறுப்பினர் விவசாயத் தொழிலாளர் பிரச்சினை என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்கும், காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. போன்ற ஏனைய கட்சிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அங்கே கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்கும் இவர்களுக்கும் தான் விவகாரம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஆன பிறகு ஆதி திராவிடர்கள், இந்துக்கள் என்று, இங்கே மிராசுதார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிகழ்ச்சி அப்படி அல்ல. அங்கே நடந்த நிகழ்ச்சி ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை அல்ல. ஆனால், ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சி ஒரு கட்சியின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. அது ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை என்று வர்ணிக்கப்படுகிறது. அது அல்ல. ஆதி திராவிடர்களுக்குக் கொடுமை என்று சொன்னால், என்னுடைய உயிரையும் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சியில் 20க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர்கள் வெட்டப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் மிக சீரியசாக இருக்கிறார். அந்த நிலையைப் போக்குவதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் இங்கே விவரித்தார்கள். ஆகவே, அதையே நானும் விவரிக்கத் தயாராக இல்லை. உடனடியாக மேற்கொண்டு இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்க அனைத்துக் கட்சிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும். அந்த பீஸ் கமிட்டி ஒரு பெரிய அதிகாரியின் கீழ் நடத்தப்பட வேண்டும். தொடர்ந்து விவகாரம் ஏதும் இல்லாமல் அமைதியாக இருக்க ஆவன செய்வது குறித்து இந்த அவையில் விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்தினுடைய பேச்சைக் கேட்ட பிறகு, இதை உள்ளபடியே ஒத்திவைத்து விவாதம் நடத்தினால் அங்கே புகைந்து கொண்டிருப்பது எரியத் தொடங்கிவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், இதை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதற்கான சில குறிப்புகளை இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

1990 மே 8] [டாக்டர் மு. கருணாநிதி]

தஞ்சை மாவட்டத்தில் தோகூர் காவல் சரகத்தில் ஒரத்தூர், நந்தமங்கலம் ஆகிய இரண்டு கிராமங்களும் அருகருகே உள்ளன. இரண்டு கிராமங்களையும் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் ஆயிரம் குடும்பத்தினர் அங்கே உள்ளனர். ஒரத்தூரில் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 1,500 குடும்பத்தினர் உள்ளனர். இருவரும் ஒருவொருக்கொருவர் தாண்டிக் கொண்டுதான் கடை களுக்கோ, வேறு இடங்களுக்கோ செல்ல வேண்டுமென்றால் செல்ல வேண்டும். கடந்த 21—3—1990 அன்று ஒரத்தூர் கிராமத்தில் வடமலை என்பவருடைய மனைவி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண் மரணம் அடைந்தது தொடர்பாக இறுதிச் சடங்கிற்கு வந்த 10 பேர் டி.சி.ஒ. 2332 என்ற வாட கைக் காரில் திரும்பியபோது, காரின் உரிமையாளர் ரத்தினசாமி என்பவரின் தம்பி சுதர்சன் என்பவர் அத்தனை பேரும் காரில் ஏறியதற்காகக் கண்டித்திருக்கிறார். ஒரத்தூரைச் சேர்ந்த தர்மராஜ், நந்தி என்கிற ராஜசேகர் ஆகியோர் தாழ்த்தப்பட்ட மக்களைக் கையால் அடித்துவிட்டனர். இது தொடர்பாக, சுதர்சன் கொடுத்த புகாரின் பேரில் தோகூர் காவல் நிலைய எண் 57/90, இ.த.ச. 341 மற்றும் 323 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கிற்கு வந்தவர்கள் பின்னால், வாடகைக் கார் வேண்டாம் என்று கூறிவிட்டு பூதலூர் புகைவண்டி நிலையத்திற் குச் சென்றுவிட்டார்கள். சுதர்சன் தாக்கப்பட்டதால் ஆத்திரம் அடைந்து அவரைச் சேர்ந்த மக்கள் புகைவண்டி நிலையம் சென்று அங்கே புகைவண்டிக்காகக் காத்திருந்தவர்களைக் கண்டித்திருக் கிறார்கள். அது தொடர்பாகக் காவல் நிலையத்திற்கு எந்தப் புகாரும் தரப்படவில்லை. இத்தனை குழப்பத்தோடு நச்சினார்க் கினியன், தர்மராஜன், முருகேசன், கிருஷ்ணன், குணசேகரன் ராஜசேகரன் ஆகியோர் வேணுகோபால் என்பவரை அடித்துக் காயப்படுத்தியிருக்கிறார்கள். அது குறித்து வேணுகோபால் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 58/90, 147, 148, 323 இ.த.ச. பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கப்பட் டிருக்கிறது. குற்ற எண் 57/90 மற்றும் 58/90 வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரிகளும் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய் யப்பட்டுள்ளார்கள். அமைதிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. எதுவுமே செய்யவில்லை என்று குற்றம் சாட்டியதற்கு விளக்கமாகச் சொல்கிறேன். எதிரிகள் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர். அமைதிக் கூட்டத்திற்கு ஏற் பாடு செய்யப்பட்டது. இரண்டு கிராமங்களுக்கும் போலீஸ் பாது காப்பும் போடப்பட்டிருந்தது.

10-40 மணி

இருந்தபோதிலும் இரண்டு பிரிவினரிடையே விரோத மனப் பான்மை வளர்ந்து வந்தது. 30—4—1990 அன்று இரவு 11 மணிக்கு நச்சினார்க்கினியன், காவல் நிலையத்திற்கு வந்து, தான்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 8

தபால் அலுவலகத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது, கலையழகன் மற்றும் 7 பேர் தன்னை விரட்டியதாகக் கொடுத்த புகார் மீது குற்ற எண் 70/90, இ.த.ச. 147, 148, 506 (1) பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. திருக்காட்டுப்பள்ளி ஆய்வாளர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, விசாரணை செய்தார். 5—5—1990 அன்று திருவையாற்றில் இரண்டு பிரிவினரையும் அழைத்துவைத்து, வட்டாட்சியர் ஒரு அமைதிக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கிடையில் 5—5—1990 அன்று அதிகாலை 5 மணிக்கு ஒரத்தூரைச் சேர்ந்த ஒரு கூட்டத்தினர் பயங்கர ஆயுதங்களோடு ஒன்று சேர்ந்து, நந்தமங்கலம் கிராமத்திலிருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தின் கீற்றுக் கொட்டகையைச் சேதப்படுத்தி, தீ வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள். நச்சினார்க்கினியன் போன்றவர்களின் குடியிருப்புகளில் புகுந்து 18 கூரை வீடுகளையும், 8 ஒட்டு வீடுகளையும் சேதப்படுத்தியதோடு, கத்தி, கம்பு, அரிவாள் முதலிய ஆயுதங்களால் காயப்படுத்தி இருக்கிறார்கள். இவர்களில் 12 பேர் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள். 10 பேர் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்றார்கள். அம்பேத்கார் மக்கள் நற்பணி மன்றம் அமைந்திருந்த ஒட்டு வீடும் சேதமடைந்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் கொடிக் கம்பங்களும் சேதப்படுத்தப்பட்டன. இந்தச் சம்பவங்களின் தொடர்பாக 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சம்பவம் பற்றித் தகவல் தெரிந்தவுடன் தஞ்சை காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளார். தஞ்சை சப்-கலெக்டரும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரித்துள்ளார். மீதமுள்ள எதிரிகளை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், கிராமத்தில் தேவையான காவல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நிலைமை இப்போது சகஜமாக உள்ளது. மேலும், கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் இரு தரப்பிலே, ஒரு தரப்பிலே நச்சினார்க்கினியன், இன்னொரு தரப்பிலே கலையழகன், தமிழ்ப் பெயருக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால், தகராறுதான் ஓயவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.